# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1547/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த-பெ | முத்தையா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 58/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 15.08.2021 அன்று அண்ணாமலை மற்றும் வள்ளியம்மை என்பவர்களின் சாந்தி நிகழ்விற்காக எனது பெற்றோர்கள் அங்கு வந்திருந்தார்கள். நான் 27.08.2021 அன்று ஊருக்கு வந்து பெற்றோர்களை அழைத்து செல்வதாக சொல்லியிருந்தேன். 09.08.2021 அன்று மதியம் 3.00 மணிக்கு என்னுடைய வீட்டின் அறையில் எனது பெற்றோர்கள் இருந்திருந்தார்கள். சம்பவ சமயத்தில் ஒரு நபர் வந்து எனது தாயாரின் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் செயினை பிடித்து இழுத்துள்ளார். அதற்கு அம்மாவும் அந்த செயினை இழுத்துள்ளார்கள். அந்த நபர் மேற்படி செயினை அறுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். தாலி மட்டும் எனது அம்மாவிடம் இருந்தது. 27.08.2021 அன்று நான் சென்னையில் இருந்து வந்து எனது பெற்றோர்களை அழைத்து செல்வதாக சொல்லியிருந்தேன். அன்றைய தினமே எனது பெற்றோர்கள் சொன்ன உடன் காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி செயினை பறித்து சென்ற நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் செயினை மீட்டு தருமாறும் புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். சில நாட்கள் கழித்து போலீசார் விசாரணையில் மேற்படி செயினை பறித்து சென்ற நபரை பிடித்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் காவல் நிலையம் வந்து மேற்படி செயினை பறித்து சென்ற நபரை எனது தாயார் அடையாளம் காட்டினார்கள். பின்னர் கனம் நீதிமன்றத்தில் மனு செய்து நிபந்தனையின் அடிப்படையில் செயினை பெற்று சென்றோம்.

**குறுக்கு விசாரணை**

எனது பெற்றோர்கள் சாந்தி நிகழ்விற்காக எங்கிருந்து வந்தார்கள் என்றால் சென்னையில் இருந்து வந்தார்கள். சாந்தி நிகழ்வு எங்கு நடைபெற்றது என்றால் பிள்ளையார்பட்டியில்

நடைபெற்றது. சாந்தி நிகழ்விற்கு எனது பெற்றோர்களை யார் அழைத்து சென்றது என்றால் எனது உறவினர்கள் அழைத்து சென்றார்கள். 18 நாட்கள் கால தாமதமாக புகார் கொடுக்கப்பட்டதற்கு காரணம் என்ன என்றால் பெற்றோர்களின் உதவிக்கு ஆள் இல்லாததால் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி 18 நாட்களும் என்னிடம் நடந்த விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில்வைத்து விசாரணை செய்தார்கள். புகார் யார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். புகாரில் எதிரியின் அங்க அடையாளங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் பார்த்தால் அடையாளம் தெரியும் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு நடைபெற்றதா என்றால் இல்லை. திருடுபோன செயினின் அடையாளங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள விபரங்கள் எனது தாயார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எதிரியை காவல் நிலையத்தில் வைத்து எனது தாயார் அடையாளம் காட்டவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.30 16:56:17 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.